மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 311/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : குழந்தைஆனந்தம் (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

8.12.2023

வாதி தரப்பு சாட்சி1 மீண்டும் அழைத்ததின் பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

1. தாவா சொத்துக்கு பழைய சர்வே எண் 134/1 என்றால் சரிதான். தாவா சொத்திற்கு புதிய சர்வே எண் 555/10 என்றால் சரிதான். 555/10ம் மாரிமுத்து பண்டாரம் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் பெயருக்கும் இருந்தது. தாவா சொத்தை மாரிமுத்துபண்டாரம் தந்தை அரியநாயகம் பண்டாரம் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையத் தொகை கொடுத்தார். எனது தகப்பனார் பணம் கொடுத்தற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்காக எனது தந்தைபணம் கொடுத்ததாகவும் தாவா சொத்தில் எனக்கு பங்கு உள்ளதாகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தின் பட்டா எண் 550, 551 என்றா எனக்கு சரியாக ஞாபகம்இல்லை.தாவா சொத்தின் விஸ்தீரணம் 20*36ஆகும். தாவா சொத்தின் சதுரமீட்டர் அளவில் எனக்கு தெரியாது. தாவா சொத்து 5ம் பிரதிவாதி அரியநாயகம் பண்டாரம் பெயரில் இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்ததாக தான் தாவா வழக்கு என்றால் சரியல்ல. அவர்கள் அண்ணன் தம்பிகளுக்குள் பிரித்துக்கொண்டார்கள். அரியநாயகத்திற்கு அவரது அண்ணன் தம்பிகள் தானசெட்டில்மெண்ட் போட்டுள்ளார்கள். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் தென்புறத்தில் கிழமேல் இருபுறமும் 18 அடி என்றால் சரியல்ல. தென்வடல் இருபுறமும் அடி 36 என்றால் சரிதான். சதுர அடி 646, 5ம் பிரதிவாதிக்கு முழுவதும் பாத்தியம்

என்றால் சரியல்ல. சதுர மீட்டர் 60.21 என்று இனாம் செட்டில் மெண்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்கே தென்வடல் ரோடு, தாவா சொத்திற்கு வடக்கே கிழமேல் ரோடு, தாவா சொத்திற்கு மேற்கு வீரம்மாகாளி பண்டாரம் பொதுச்சந்து, தாவா சொத்திற்கு தெற்கே அரியாநாயகம் பண்டாரம் . 5ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் வடக்கே சர்வே எண் 555/9 என்பது யாருக்கு பாத்தியம் என்பது எனக்கு தெரியாது. கிழக்கே சர்வே எண்555/13 என்பது யாருக்கு பாத்தியம் என்றால் அது பொது ரோடு. தெற்கு புரத்தில் சர்வே 555/11, 555/12 யாருக்கு பாத்தியம் என்றால் அரியநாயகம் மகன் மாரிமுத்து பண்டாரத்திற்கு உள்ளது. தாவா சொத்து, வீடு, காலி இடம் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்றாலும் நான் போலியாக ஆவணம் உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1255 அரியாநாயகம் மகன் மாரிமுத்து பண்டாரம் பெயரில் நடுதெருவில் ஒரு சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தில் எனக்கு பாகம் உள்ளதா என்றால் எங்களுக்கும் உள்ளது அவர்களுக்கும் உள்ளது. அதன் சர்வே எண் தெரியவில்லை. 10*10 அளவு பாகம் ஆகும். சர்வே எண். 338/2பி –ல் 39.50 ஏர்ஸ் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து 10*10 இருப்பதாக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பாகம் இருந்திருந்தால் 39.50ஏர்ஸ்–ல் எனக்கும் என் தந்தைக்கும் சரியாக பாகம் இருந்திருக்கும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வயல்காட்டில் எனக்கு பாகம் இல்லை. தாவா சொத்து பாகம் இருந்திருந்தால் வயல்காட்டிலும் எனக்கு பாகம் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவிர பிரதிவாதிகள் சொத்தில் எந்த விதத்திலும் பாகம் கிடையாது என்றால் சரியல்ல. வாசாஆ1 அனைத்தும் போலியாக உற்பத்தி செய்து தீர்ப்பு பெற்றிருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரில்ல .

மறு விசாரணை –

2. இல்லை.